**அசல் வழக்கு எண். 86/2018** **நாள்: 15.07.2025**

**வா.சா.1 திரு. ராதாகிருஷ்ணன்**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தனா என்றால் ஆமாம். 07.02.2009 ஆம் நாளன்று 2ம் பிரதிவாதிக்கு எதிராக கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டேன் அது தொடர்பாக இந்த வழக்கினை 2ம் பிரதிவாதிக்குஎதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . 51 சென்ட் நிலத்திற்கு மட்டும் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரிதான் மேற்படி 51 சென்ட் நிலத்திற்குள் மோட்டாரும் உண்டு. எனது அப்பா இறந்தபிறகு உயில் நடைமுறைக்கு வந்தபிறது மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரிதான்.

2) மேற்படி கிரைய ஒப்பந்தத்தின்படி 2ம் பிரதிவாதியும் நானும் வழக்கு சொத்தை பொறுத்து கிரைய மொத்த தொகையாக பேசி நிச்சயிக்கப்பட்ட தொகை ரூ.4,56,000 என்றால் சரியா ஞாபகம் இல்லை. அந்த மொத்தகிரைய தொகையில் முன்பணமாக ரூ.2,50,000 வாங்கினேனா என்றால் ஆமாம். மேற்படி கிரையஒப்பந்தம் செய்து கொண்டது முதல் பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்பதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தை பொறுத்து யார் அனுபவத்தில் இருக்கிறார்களோ அவர்களுக்குதான் வருவாய்துறை ஆவணங்கள் வழங்கப்படும் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய நாள்முதல் வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என காட்டுவதற்கு வருவாய்துறை ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என்னென்ன வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சிட்டா அடங்கல் தாக்கல் செய்துள்ளேன்.

4) கிரைய மீதிதொகையை கொடுத்துவிட்டு கிரையம் செய்து கொள்ளுமாறு 2ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதிக்கு கடந்த 09.08.2015 தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் அந்த அறிவிப்பிலும் கிரைய மீதிதொகையை கொடுத்துவிட்டு கிரையம் செய்து கொள்ளுமாறு கூறவில்லை என்றால் சரிதான். நானும் பிரதிவாதிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனக்கு பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான் அந்த அறிவிப்பில் மீதி கிரையத்தொகையை கொடுத்து கிரையம் செய்துக்கொள்ள தயாராக இருப்பதாக கூறியிருந்தார் என்றால் சரிதான்.

5) நான் 2ம் பிரதிவாதியோடு ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம்படி நடந்துகொள்ளாமல் அவரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரி வழக்குரைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நான் அனுபவம் செய்யாத நிலையில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர தகுதியற்றவர் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் காலவரையறை நிர்ணயம் செய்யாதபோது ஒரு மாதத்தில் கிரையம் செய்துகொள்வதாக குறிப்பிட்டுள்ளதுபோல் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

6) எனக்கும் எனது உடன்பிறந்த சகோதரருக்கும் இடையே சொத்து தொடர்பாக பாகபிரிவினை வழக்கு இருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதா என்றால் தாவா சொத்து தொடர்பான பாகபிரிவினை வழக்கு முடிந்துவிட்டது. எப்போது முடிந்துவிட்டது என்றால் ஞாபகம் இல்லை, அந்த வழக்கு முடிந்த பிறகுதான் இந்த வழக்கில் தொடர்புடைய கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டோம். வழக்கு முடிந்த பிறகுதான் கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டோம் என்று கூறுவது பொய் என்றாலும் கடந்த 2023 ஆம் வருடம்தான் மேற்படி பாகபிரிவினை வழக்கு முடிந்தது என்றாலும் சரியல்ல.

7) வழக்கு சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருக்கும்போது கிரைய ஒப்பந்தம் செய்து கொடுக்க எனக்கு உரிமை இல்லை என்றால் வழக்கை முடிந்தபிறகுதான் கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டேன். எனக்கும் எனது சகோதரருக்கும் பிரச்சனை இருந்ததால்தான் தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு

கிரையம் செய்து கொடுக்க முடியவில்லை என்றால் சரியல்ல. 18.08.2018 அன்று நான் நிலத்தில் சாகுபடி செய்துகொண்டிருந்தபோது பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சனை செய்ததாக பொய்யாக வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் செய்த நாள் முதல் தற்போது வரை பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல, தாவா சொத்தில் AST 16 நெல்ரகத்தை பயிர் செய்துள்ளார் என்றால், இந்தபோகம் மட்டும் நெல்சாகுபடி செய்துள்ளார்கள். வழக்கு சொத்தின் தற்போதைய உரிமையாளர் மற்றும் அனபோகதாரர் பிரதிவாதிகள்தான் என்றால் சரியல்ல. அனுபவமும் உரிமையும் இல்லாத நிலையில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

/ஒ.ம்/
திரு.P. ரமேஷ், B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.